அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் ................................... 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

உறவுகள்..............................................................2

சிலப்பதிகாரம்......................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 6

கவிதைகள். ........................................................ 7



சிந்தனை 7 செயல் 6 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். மே 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## திருட்டும் தொழில்நுட்பமும்!

"**திருட்டு**", "**களவு**" இது இல்லாமல் ஒரு காலம், ஒரு சமூகம், ஒரு நாடு இருந்ததாக வரலாறே இல்லை. சிறப்பித்து போற்றப்படும் சங்க காலத்தில் கூட, ஆறலைக் கள்வர்கள் எனப்படுவோர் குறிஞ்சியும், முல்லையும் திரிந்து பாலையாகிப் போன காட்டிலே வழிப்பறியில் ஈடுபட்டதாக குறிப்பு உள்ளது. மதுரையில் இரவுநேரக் கள்வர்கள், அவர்களின் நடமாட்டம் பற்றிய செய்தி "மதுரைக்காஞ்சி" யில் காணப்படுகிறது. எப்படியோ கள்வர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாகவே இருந்து வந்துள்ளனர்.

வயிற்றுப் பசிக்கு கடையில் உணவுப் பண்டத்தை திருடும் சிறுவனையும், அதற்காக கடுமையான தண்டனை வழங்கப்படுவதையும் முன்பு திரைப்படங்களில் அடிக்கடி காட்டுவார் கள். சிறிய திருட்டு கூட பெரும் குற்றமாகக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. 1970 களுக்கு முன்பு கிராமங்களில் மட்டுமல்ல நகரங்களில் கூட வீட்டைப் பூட்டாமல் அடுத்த தெருவில் உள்ள கடைக்கோ, உறவினர் வீட்டுக்கோ சென்று வர முடிந்தது. என்றாலும், கிராமங்களில் கோழி, ஆடு திருடுவதும், நகரங்களில், வெளியில் காயப்போட்டுள்ள துணிமணிகளைத் திருடுவதும், பாத்திரங்களைத் திருடுவதும் ஆங்காங்கே நடந்து கொண்டுதான் இருந்தது. பிடிபட்டால் கொடுக்கும் தண்டனையும் சற்று தூக்கலாகவே இருந்தது.

நாகரிகம் வளர, வளர திருடுவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. வீட்டை உடைத்து பணத்தை திருடுவது, நகைக்கடை கொள்ளை என்று வளர்ச்சியடைந்தது. கொள்ளையர்கள் கூட்டணி அமைத்து வங்கியில் கொள்ளையடிப்பது என்ற அளவில் அது சென்றது. அப்பொழுதே புரிந்து விட்டது - திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது, அது திரைப்படப் பாடலாகவும் வெளிவந்து திருட்டைத் தடுப்பதில் உள்ள அறைகூவலை உணர்த்தியது. இதுவரை சுட்டிக்காட்டப்பட்ட திருட்டுக்கெல்லாம், துணிச்சலும், வலுவான உடலும் இருந்தால் போதும். படிப்பறிவு தேவையில்லை. பட்டமும் தேவையில்லை.

ஆனால்....இன்று நாம் கேள்விப்படுகின்ற, காணுகின்ற திருட்டுக்கெல்லாம் அறிவு வேண்டும்! ஆம்..! படிப்பறிவு வேண்டும். அவர்கள்தான் இன்றைய காலத்தில் மிகவும் நூதனமாக பிறர் பணத்தைக் கொள்ளை கொள்ள முடியும்.

நாம் தொழில்நுட்ப புரட்சிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் பணத்தை, மின்னணு தொழில்நுட்பமே பராமரிக்கின்றன. அதன்படி நம் பணத்தை பாதுகாப்பாக நாம் கையாளுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அறிவுசார் திருடர்கள் நொடிப்பொழுதில் நம் பணத்தை சுருட்டி விடுகிறார்கள். அறிவியலுக்குத் தெரியுமா? அவன் திருடன் என்று,! இத்தகைய படித்த, தொழில்நுட்பக் குற்றவாளிகளைத் தேடிப்பிடித்து சிறைப்படுத்த தனியாக ஒரு துறை இருந்தாலும், பல நிகழ்வு களில் இழந்தது இழந்ததாகவே உள்ளது.

தொழில்நுட்ப அறிவியல் பல நன்மைகளைத் தந்த போதும், கூடவே, சில சிக்கல்களும் கைகோர்த்து நிற்கின்றன. அப்படியென்றால் என்னதான் செய்வது ?

நம் பணத்தைக் கையாளும் முறைகளில் நாம் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் இருக்க வேண்டும். ஒவ்வொரு விடயங்களிலும் நம் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். அல்லது...திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என ஆறுதல் அடைய வேண்டியதுதான்.

அன்புடன். ஆசிரியர்.



## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

எதற்கும் மன்னிப்புக் கேட்கும் மனோபாவம் கொள்ளாதீர்கள். மற்ற எல்லா ஜீவராசிகளைப் போல உங்களுக்கு இவ்வுலகில் வாழும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எதற்கும் உங்களையே நொந்து கொண்டு, தன்நிலைக்குப் பரிதாபப்பட்டு. சித்திரவதை செய்து கொள்ளாதீர்கள். பிறர் உங்களைக் குழந்தையாகப் பாவித்து உச்சிமோந்து சீராட்டி, தாலாட்டும் நிலையில் உங்களைப் பிறரிடம் பறிகொடுக்காதீர்கள். இவை எல்லாம் எந்தக் குறைபாடுகளை நம்மிடம் காட்டுகின்றன நம்மை நமக்கே பிடிக்கவில்லை என்பதை, நம்மீது நமக்கே வெறுப்பு என்பதை. நமக்கு இருக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மேற்கண்ட வழிகளில் நாம் தந்திரங்களைக் கையாளுகிறோம் என்பதை, மாறுபட்ட நிலையைச் சமாளிக்க முடியாத பயமும், பலவீனமும் நம்மிடம் இருக்கிறது என்பதை.

பிறர் பாராட்டையும், ஆமோதிப்பையும், அங்கீகாரத்தையும் பற்றி லட்சியம் செய்யாமல் நாம் நம் பணியில், கொள்கையில் ஈடுபடுவோமானால், பாராட்டும் புகழும் நம்மைத் தொடர்ந்து வரும். பிறர் நமது செயலைப் பற்றி விமர்சனம் செய்து குறைகளை எடுத்துக் காட்டுகிறார்கள் என்றால் அப்போது தாராள மனத்துடன் நன்றி கூறுங்கள். சிலர் நம்மைச் சீண்டுவதற்கென்றே நம்மை கோபமூட்ட அவமானமூட்டும் சுடுசொற் களை வீசக்கூடும். அதைக் கண்டுகொள்ளாமல் அமைதியாக இருந்துவிடுவது தான் பெருந்தன்மையாகும்.



நன்றி...கங்கை புத்தக நிலையம்

## உறவுகள்.....

முனைவர்.லெ.பாஸ்கர்

குடும்ப உறவுகளில் “எதிர்பார்ப்பு” என்பது இல்லாமல் இருக்க முடியாது. இது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, இதில் தவறும் இல்லை. ஆனால் உறவுகளில் பாசம் இருப்பதை விட, பணம்தான் அதிக வேலை செய்கிறது. உறவுகளில் என்ன புரிந்து கொண்டோம் என்பதை விட, எப்படி புரிந்து கொண்டோம் என்பதுதான் முக்கியம். வீட்டுக்கு வரும் உறவுகளில், மிகவும் சிரமப்பட்டு நாலு பேருந்து மாறிவந்த பெரியப்பாவை விட்டுவிட்டு, காரில் வந்து இறங்கும் சித்தப்பாவை ஏன் எல்லோரும் விழுந்து விழுந்து கவனிக்கிறார்கள் என்றதொரு நிலை எல்லோரது இல்லங்களிலும், உள்ளங்களிலும் நிறைந்துள்ளது யாரும் மறுக்க முடியாத உண்மை. இது ஏன் என்று மனித மனத்திடம் கேட்டேன். மனம் சொன்னது, இதில் சிந்தித்துப் பார்த்து அறிவதைவிட, பட்டு தெரிவதே மேல் என்றது. ஒத்த எண்ணம் கொண்ட உறவுகள் என்று யாரும் இருக்க முடியாது. மிக்க அன்பு பாராட்டும் உறவுகள் கூட, காலம் வரும்போது தம் நிறத்தைக் காட்டி விடுகின்றன. தன்மீது மட்டுமே அன்பு காட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் பழகும் உறவுகளே சிறந்த உறவுகளாக இருக்க முடியும். அதற்காக அன்பு, என்பது உறவுகளுக்கிடையே தேவையற்றது என்பது பொருளல்ல. நம்மைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு அது சென்றுவிடக் கூடாது.

உறவுகளில் எது முக்கியம்? பணமா? பாசமா ? என்றால், இரண்டையும் விட, நற் பண்புகளே உறவுகளைப் பிணைக்கும் இழையாக இருக்க வேண்டும் அதுவே நீடித்த நட்பாக, உறவாக நிலைத்து மகிழ்ச்சியளிக்க முடியும்.



# சிலப்பதிகாரம் காவியம்

**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன் கண்ணகி இருவரின் முடிவும், மதுரையின் அழிவும்.**

**மரு.த.இராசலிங்கம்.**

.சென்ற இதழ் தொடர்ச்சி.....

### 262.மன்னனிடம் தெரிவிப்பாய்

கதம்கொண்ட கண்ணகியின் கோலம் கண்டு
காவலனும் கணப்பொழுது அதிர்ந்து போக
இதமாக என்னவென்று கேட்கும் முன்னே
இடியெனவே அவளும்தான்முழங்கிநின்றாள்

கடையகத்தாள் கணவனையோ இழந்தவள் தான்
கண்ணீருடன் கால்சிலம்பு கையில் ஏந்தி
உடனடியாக வழக்கொன்று உரைத்திடத்தான்
உன்அரண்மனை வாயில்தான்வந்தாளென்று
அடைந்திடாத பழியொன்றுஅடைந்தமன்னன்
அவைக்குநீயும் இக்கணமே ஏகிச் சென்று
விடையொன்று வியனரசு இன்று காண
தெரிவிப்பாய் மன்னனிடம் ! என்று சொல்ல..

### 263. வாயிலோன் மன்னனிடம் அறிவித்தல்

வாயிலோனும் அவையினை நாடி
வணங்கியவன் மன்னனை நோக்கி
தாயினும்எம் குடியினைக் காக்கும்
தண்டமிழின் மன்னவா போற்றி!
தேயமதில் எங்ஙனும் காணா
தெய்வம்போல் அணங்கென பெண்ணாள்
காயமதில் காளியின் தோற்றம்
கண்ணிரண்டில் ஆடிடும் கூற்றம்
மாயமதும் விளைத்திடும் தையல்
மணாளனைத்தான் இழந்தவள் என்று
ஆயிழையோ கொற்றவன் காண
அரண்மனைவந் தாளென உரைக்க....

### 264. கண்ணகியை அழைத்துவர காவலன் செல்லல்.

மன்னவனின் ஆணைபெற்ற வாயில் காப்போன்
மனதில்தான் நிம்மதியும் பெற்றா னாக
வான்மதியும் வதங்கியங்கே வந்தாற் போலும்
வாசலிலே நிற்கின்ற கண்ணகிக் காக
தான்அதிகம் கவலையும்தான் கொண்டா னாக
தவிப்புடனே தலைவாசல் விரைந்து வந்து
தென்னவனின் அழைப்பினையே பணிந்துகூற
தீர்க்கமுடன் கண்ணகியும் உள்ளே சென்றாள்.

### 265. பாண்டியன் அவையில் கண்ணகி

பூம்புகாரின் பூவொன்று புயலாய் மாறி
புகுந்ததுவோ? பாண்டியனின் அவையின் உள்ளே !
வேம்பொன்று வேருடனே மண்ணில் சாய
விழுந்ததுவோ? பாண்டியனின் அவையின் உள்ளே!
சாம்பலென எரிமலையின் வெம்மை யெல்லாம்
சரிந்ததுவோ? பாண்டியனின் அவையின் உள்ளே!
ஆம்பலென அழகுடைய சிவந்த கண்கள்
அச்சமூட்ட அவையினுள்ளே கண்ணகி தோன்ற.....

### 266.மன்னன் வினவல்

கண்களில் நீரும் கொண்டு
கனலதும் அதிலே தோன்ற
என்னையும் காண வந்த
ஏந்திழை நீதான் யாரோ ?

உன்னையும் ஈன்ற ஊரும்
உன்மனக் குறையும் சொன்னால்
மன்னவன் தீர்வும் சொல்வேன்
மாண்புற மன்னன் வேண்ட,

### 267. கண்ணகி வழக்குரைத்தல்

தேராது மன்னவா நீயும்
 தெளிந்தேஉரைத் தனையோ நீதி ?
ஊரதுவும் செப்புவேன் கேளாய்!
 உண்மையினை உணருமோ நெஞ்சம் ?
தேரதுவும் செலுத்தியே கன்றை
 தெரிந்தேதன் மகனவன் கொல்ல,
நேராக அரண்மனை வந்து
 நீதிகேட்டு தாய்பசு நிற்க,
பாராளும் மன்னவன் பெற்ற
 பாவிமகனை தேரிலேக் கொன்று
சீராளும் நாடென அன்று
 சீர்திருத்த தீர்ப்பதும் தந்த
சோராத சோழனும் ஆண்ட
 சொல்லுக்குள் நாணயம் கொண்ட
கூரான குடிகளும் வாழும்
 பூம்புகாரில் பிறந்தவள் நானே!

மானமிகு குடிதனில் தோன்றி
 மாசாத்தி வாணிபம் செய்து
தானமிகு பற்பல ஈந்தும்
 தவிர்க்கவொண்ணா ஊழ்வினை தன்னால்
போனபொருள் மீட்டிட எண்ணி
 பொற்சிலம்பை விலையது மாற
வானவர்க்கும் வழியது காட்டும்
 வளமார்ந்த மதுரையும் அடைந்து
கோணலான நீதியின் கூற்றால்
 கொலைக்களத்தில் பழியுடன் மாண்ட
ஆணவமென் பதறியா கோவலன்
 அருமைமனைவி கண்ணகி நானே!
!

### 268.மன்னன் மறுமொழி

உளவுபோன காவலர் இன்று
உன்கணவன் கோவலன் கையில்
களவுபோன தேவியின் சிலம்பும்
கண்டுவந்து என்னிடம் சொல்ல...

விளக்கமதும் விளம்பிடக் கேட்டு
விரைவாக முடிவதும் செய்து
தளத்தினிலே தக்கவர் முன்னால்
தண்டனையும் தந்திடச் சொன்னேன்

உற்றதொரு கணவனை இழந்த
உனக்காக வருந்தினும் பெண்ணே,
குற்றமிழைக்க ஒறுத்தலும் இங்கே
கொற்றவனின் கடமையே பெண்ணே!

### 269.கண்ணகி எதிர்சொல்லாடல்

குற்றமதும் கொற்றவன் செய்தான்
கொண்டுவந்த வழக்கதும் கேளாய்!
பெற்றவளும் பொறுத்திட மாட்டாள்
பெரும்பாவம் செய்தனை மன்னா!
பற்றியபொற் சிலம்பது பார்த்து
பறிபோன துதானா என்று
உற்றறிந்தா முடிவதும் செய்தாய் ?
உரைத்திடுக ! ..கண்ணகி சீற....

........................தொடரும்.

**இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் காப்பியத்தை, அதன் உட்கருவை , கதையை மாற்றாமல், சில பகுதிகளை வேண்டாம் என்று விடுவித்தும், கதையின் சீரான போக்கை கருத்தில் கொண்டு சில இடங்களை நிரவல் செய்தும் எனது நடையில், எளிய மரபுக்கவிதைகளாக எழுதி வருகிறேன் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
## கலித்தொகை --- பாலைக்கலி

**இளவேனிற் காலத்தில்** திரும்பி வருவேனென்று சொல்லிச் சென்ற கணவன் வரவில்லை. அந்த இளவேனிற் காலத்தின் எழிலையும், தலைவன் வராததால் தலைவி கொண்ட ஏக்கத்தையும் எவ்வளவு அழகாக பாலைக்கலி எடுத்துக்காட்டுகிறது பாருங்கள். வைகை ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. ஆற்றின் இடையிடையே தோன்றும் செந்நிறமான மணல்மேடுகள், கன்னியர்கள் தம் தலையிலே தலைக்கோலம் சூடிவருவது போன்று காட்சியளிக்கின்றன. பெண்ணின் மார்பிலே விளங்கும் முத்தாரம் போல, ஆற்றுநீர் மணலை ஊடறுத்துச் சென்று கொண்டிருக்கிறது.

**செய்யவள் அணி அகலத்து ஆரமொடு அணி கொள்பு**
**தொய்யகம் தாழ்ந்த கதுப்புப் போல் துவர் மணல்**
**வையை வார் அவிர் அறல், இடை போழும் பொழுதினான்..** என்ற வரிகள் இளவேனிற் காலத்து ஆற்றங்கரையை நம் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

மலரெல்லாம் இதழ் விரிக்க, குயில்கள் தம் இணையைக் கூவி அழைக்கின்றன. ஆனால் என் தலைவன் என்னைப் பிரிந்திருக்கின்றாரே, காமத்தால் தனித்திருக்கின்ற மகளிரை வருத்தும் பொழுதல்லவா இது!

புதற்களில் கூட மலர்கள் நிறைந்துள்ளன. சோலைகளிலே வண்டினம் சூழ்ந்து இசை பாடுகின் றன. அயலவர் அலர் தூற்றுவாரே என்று கூட கருதாது என்னை நினைக்காமல் , நெற்றியிலே பசலை படர, இரக்கமற்ற நெஞ்சோடு இருக்கின்றாரே ?. அவருக்கு என்மீது அன்புதான் இல்லையோ ?.

மணலிலே நீர் நிறைந்து காணப்படுகிறது. பூக்களிலே வண்டுகள் தேன் உண்ணுகின்றன. மாமரத்திலே இளந்தளிர்கள் துளிர்த்துள்ளன. மலர் போன்ற என் கண்கள் ஓயாது அழுது புலம்புகின்றன. அவரோ என்னை அடியோடு மறந்திருக்கின்றார்.

இவ்வாறெல்லாம் தலைவி தனிமையில் வாட எண்ணுவதையெல்லாம், நயம்பட உரைக்கின்றது பாலைக்கலி.

**விரிந்து ஆனா மலராயின், விளித்து ஆலும் குயிலாயின்,**
**பிரிந்து உள்ளார் அவராயின், பேதுறூஉம் பொழுதாயின்**
**அரும் படர் அவல நோய் ஆற்றுவள் என்னாது**
**வருந்த, நோய் மிகுமாயின்- நுணங்கிறை அளி என்னோ ?**
**புதலவை மலராயின், பொங்கரின் வண்டாயின்**
**அயலதை அலராயின், அகன்று உள்ளார் அவராயின்,**
**மதலை இல் நெஞ்சொடு மதனிலள் என்னாது**
**நுதல் ஊரும் பசப்பாயின்- நுணங்கிறை! அளி என்னோ?**
**தோயின அறலாயின், சுரும்பு ஆர்க்கும் சினையாயின்,**
**மாவின தளிராயின், மறந்து உள்ளார் அவராயின்,**

இந்தப் பாடலில் மலராயின்...குயிலாயின்...அவராயின்....பொழுதாயின்....மிகுமாயின்....என்று கலித்தொகைக்கே உரிய இசைநயம் இழையோடுவதைக் காணலாம்.

.......உவமையழகு தொடரும்

மரு.த.இராசலிங்கம்







## மது மற்றும் போதை ஒழிப்பு கையெழுத்து இயக்கம்

மது மற்றும் போதை ஒழிப்பை வலியுறுத்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களிடம் பெறப்பட்ட கையெழுத்து அடங்கிய ஆவணம் தூத்துக்குடி மாவட்ட மக்கள் சக்தி இயக்க மாவட்டச் செயலாளர் பண்பாளர். கந்தசாமி, மாவட்டப் பொருளாளர் பண்பாளர் அ. வன்னியராஜ் ஆகியோரால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு அனுப்பும் பொருட்டு இயக்க மாநிலத் தலைவர் **மருத்துவர். த.இராசலிங்கம்** அவர்களிடம் 10.05.25 அன்று வழங்கப்பட்டது.

கையெழுத்து இயக்கத்தை முனைப்புடன் நடத்திய இயக்கப் பண்பாளர்கள் **கந்தசாமி, வன்னியராஜ், முத்துகிருஷ்ணன், பாலசுந்தரம், சங்கிலி, மாரியம்மாள், திருமதி.லீலா** ஆகியோரை மாநிலத் தலைவர் வெகுவாகப் பாராட்டினார்.

## மக்கள் சக்தி இயக்கம் மாநிலப் பொருளாளர். கே.சி.நீலமேகம் பணிநிறைவு விழா

தொடர்வண்டித் துறையில் பணியாற்றி பணி நிறைவு பெறும் இயக்கப் பொருளாளர். பண்பாளர். கே.சி.நீலமேகம் அவர்களுக்கு திருச்சியில் 21.05.25 அன்று பணிநிறைவு விழா நடைபெற்றது. துறை சார்ந்த தொழிற் சங்க நிருவாகிகள், நண்பர்கள் கலந்து கொண்ட விழாவில் இயக்கம் சார்பாக மாநிலப் பொதுச்செயலாளர் பண்பாளர் **முனைவர். தஞ்சை லெ.பாஸ்கர்**, மாநில செயற்குழு உறுப்பினர். பண்பாளர். **வெ.இரா. சந்திரசேகர்,** மாநில துணைச்செயலாளர். பண்பாளர். **இரா.இளங்கோ**, தஞ்சை மாவட்டச் செயலாளர். பண்பாளர். **பேராசிரியர். முருகானந்தம்** ஆகியோர் கலந்து கொண்டு நினைவுப் பரிசு வழங்கியதோடு, கே.சி. நீலமேகம் அவர்களின் பொதுத்தொண்டு மேன்மேலும் சிறக்க வாழ்த்தினார்கள்.

- **வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப்பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!**
- **நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும், உலகத்துக்கும் கேடுதான்.**
- **நல்ல மது என்று அருந்தினால் அது மெல்ல, மெல்லக் கொல்லும். கள்ள மதுவோ உடனே கொல்லும்!**
- **இயற்கைக்கு முரணானது போதை!**
- **இல்லறத்துக்கு எதிரானது போதை !**
- **பழி, பாவங்களைச் செய்யத் தூண்டும் மது! நண்பனையும் பகைக்கும் அது!**
- **உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்து, குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா?**
- **சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் மது மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதோடு, வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்ற, மதுவாசனை இந்த மண்ணின் வாசனை யாகாமல் தடுக்க,**

**பூரண மதுவிலக்கு, போதை ஒழிப்பு பரப்புரையை இன்றே தொடங்குவோம்!**

## முடிவுசெய் !

உண்மைகள்
உறங்கிடும் காலமடா...
உறவுகள்
பொய்யாகும் கோலமடா!

வஞ்சகம்
மிகுந்த உலகமடா...
வாய்மை
எரிந்திடும் வேளையடா!

உள்ளொன்று
புறமொன்றாய்ப் பேசுகின்றார்...
கள்ளத்தன
காலங்களில் புரளுகின்றார்!

இறகுகளை
வெட்டுதல் நியதியென்றார்...
கிளியினைக்
கூட்டில் அடைத்துவைத்தார்!

நெஞ்சின்
துடிப்புகள் ஓயவில்லை...
நேர்மையின்
தவிப்புகள் அடங்கவில்லை!

மலையே...அருவியே...
முடிவெடுப்பது எப்போது ?
முதுகி லெழுதும் கணக்கை
முடிவு செய்வது நீதானே !

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

## சிரிப்பு எனும் மருந்து

பிச்சிப்பூ இதழ்விரிக்க
பிஞ்சுக்கதிர் நாவாட
பொழுதும் தெரியாதடி
பொக்கை வாய்ச்சிரிப்பு!

கண்ணீர் அருவிவீழ
கவலை தோய்த்தெடுக்க
கரையச் செய்யுமடி
கண்மணி புன்சிரிப்பு!

சோதனை சுழன்றடிக்க
வேதனைத்தீ கருக்க
தன்னம்பிக்கை மருந்தடி
தாமரை இதழ்சிரிப்பு!

நோயில் நொடிந்தாலும்
பாயில் புரண்டாலும்
மனதிற்கு இதமாகும்
மல்லிகைப் பூச்சிரிப்பு!

மலர் சிரித்தாலும்
இதழ் விரித்தாலும்
பொன்னகை அணிந்தாலும்
கண்ணே உன்
புன்னகைக்கு ஈடேது..!

கவிஞர். ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி